**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 66 / 2024**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Silambarasan |
| Father / ~~Husband~~ Name | : Shankaran |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 16th day of September, 2025.

**(Accused is present)**

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது வெங்கலில் வசித்து வருகிறேன். நான் எஸ்.சி. ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். ஆஜர் எதிரி வேலுவை எனக்கு தெரியும். அவர் என்ன சாதியை சேர்ந்தவர் என்று தெரியவில்லை. ஆனால் அவர் தலித் அல்லாதவர்.

காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது ஊர் பொதுமக்கள் பெயரில் புகார் கொடுக்கமுடியாது என்பதால் யாராவது ஒருவர் மட்டும் புகார் கொடுக்க வேண்டும் என்பதால் நான் புகார் கொடுத்தேன். புகார் கொடுத்தபிறகு பொதுமக்கள் சமூக வலைதளங்களில் வேலு என்பவர் அவதூறாக பேசியதாக காட்டினார்கள். பின்னர் தான் எனக்கு என்ன பிரச்சனை என்று தெரியும். புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது ஆகும். புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று சரியாக ஞாபகமில்லை. புகாரில் உள்ள கையொப்பம் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் போலீசார் விசாரணையில் கடந்த 22/12/2018 ஆம் தேதி நான் டாக்டர் அம்பேத்கர் முற்போக்கு கூட்டணியில் உறுப்பினராக இருந்ததாகவும், ஆஜர் எதிரி வேலு தன்னுடைய முகநூல் பதிவில் ஒட்டுமொத்த ஆதிதிராவிடர் வகுப்பை இழிவுபடுத்தும் விதமாக மற்றும் ஜாதி வெறியை தூண்டும் வகையில் மிகவும் கடுமையான வார்த்தைகளால் பறையர் மக்களை அவதூறாக பேசியுள்ளார் என்றும், அதை நான் முகநூலில் சுமார் இரவு 11.11 மணிமுதல் 11.54 மணிவரை அவர் முகநூலில் பதிவிட்டிருந்த பதிவுகளை பார்த்ததாகவும், அதில் ஆஜர் எதிரி அவர்கள் 1) பரையன் என்பவன் எனக்கு வாய்த்த அடிமை. இவனை ஏன் பறையன் என்கிறோம். மேல் சாதிக்கு அடிமை பட்டவன். 2) பறை நாய்யே நீங்கள் எனக்கு அடிமை நாய்கள். என்னை ஆள நினைத்தால் உங்களை என் காலில் நசுக்குவேன். பறை நாய்களே உங்களை ஆளப்பிறந்தவன் எங்கள் வேலை. 3) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பறைநாய்களே எங்களை ஏன் அடிமை என்று சொல்கிறேன். என் காலில் விழுந்து மன்னிப்பு கேளுங்கள். 4) என்னை அசைத்து பார்க்க முடியுமா பற நாய்களே என்று நான்கு முறை பதிவு செய்துள்ளதாகவும், எனவே ஆஜர் எதிரி வேலுமீது நடவடிக்கை எடுக்குமாறு நான்

வெங்கல் காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டு, போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.